வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 04.10.2023 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

- பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, மத்திய பிரதேஷ் மற்றும் ராஜஸ்தானில் மொத்தம் 17 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.
- சாலையோர வியாபாரிகளுக்கான ஸ்வாநிதி திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை 50 லட்சத்தை தாண்டி, புதிய மைல்கல் எட்டப் பட்டுள்ளதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.
- பிரதமரின் உஜ்வாலா திட்ட பயனாளிகளுக்கான 200 ரூபாய் கேஸ் சிலிண்டர் மானியத்தை 300 ரூபாயாக உயர்த்த, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடக்குவது குறித்து, தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பை நிறுத்தி வைக்கக் கோரி, தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின், பிரதமருக்கு கடிதம் எழுதி உள்ளார்.

---------------------------------

*மோடி 1 (17)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, மத்திய பிரதேஷ் மற்றும் ராஜஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டு, மொத்தம் 17 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைக்கிறார். மத்திய பிரதேஷ் மாநிலத்திற்கான 12 ஆயிரத்து 600 கோடி ரூபாய் திட்டங்களும், ராஜஸ்தான் மாநிலத்திற்கான 5 ஆயிரம் கோடி

ரூபாய் திட்டங்களும் இதில் அடங்கும். மத்திய பிரதேஷ் மாநிலம் ஜபல்பூர், மற்றும், ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் இதுதொடர்பான விழாக்கள் நடைபெற உள்ளன.

ஜபல்பூரில், பிரதமர் தொடக்கி வைக்கும் திட்டங்களில், சாலை, ரயில், எரிவாயுக் குழாய் பாதை, வீட்டு வசதி, மற்றும், குடிநீர் வினியோகத் திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், மத்திய பிரதேஷ் மாநிலம் இந்தூரில், நவீன கட்டுமான தொழில்நுட்பங்கள் மூலம் கட்டப்பட்டுள்ள, இலகு ரக வீடுகளையும், பிரதமர் நாளை திறந்து வைக்கிறார். 128 கோடி ரூபாய் செலவிலான இத்திட்டத்தினால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெற உள்ளன.

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், ஜபல்பூர், மண்ட்லா மற்றும் திந்தோரி மாவட்டங்களில் மொத்தம் 2 ஆயிரத்த 350 கோடி ரூபாய் செலவில்

மோடி 2 (13)

மேற்கொள்ளப்பட உள்ள பல்வேறு திட்டங்களுக்கும் பிரதமர் நாளை அடிக்கல் நாட்டுகிறார். ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில், நாளை பிரதமர் தொடக்கி வைக்கும் திட்டங்களில், சாலை, ரயில், விமான போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உயர் கல்வித் திட்டங்கள் அடங்கும்.

ஜோத்பூர் ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தின் புதிய வளாகத்தை, பிரதமர் நாளை, நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

ஜோத்பூர் எய்ம்ஸ் மருத்துவமனையில், 350 படுக்கைகள் கொண்ட விபத்து சிகிச்சை மையம் அமைக்கும் பணிகளுக்கும், பிரதமரின் ஆயுஷ்மான் பாரத்-சுகாதார உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், ராஜஸ்தான் மாநிலத்தின் 7 மருத்துவமனைகளில், தீவிர சிகிச்சை மையங்களை அமைக்கும் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

ஜோத்பூர் விமான நிலையத்திற்கு, புதிய, அதிநவீன முனையக் கட்டிடம் கட்டும் பணிகளையும், அவர் அடிக்கல் நாட்டி தொடக்கி வைக்கிறார்.

---------------------------------

மோடி – ஸ்வாநிதி (9)

சாலையோர வியாபாரிகளுக்கு கடன் உதவி வழங்குவதற்கான பிரதமரின் ஸ்வாநிதி திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை 50 லட்சத்தை தாண்டி, புதிய மைல்கல் எட்டப் பட்டுள்ளதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். இந்த சாதனை குறித்து, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவிற்கான பதிலில், பிரதமர் தமது பாராட்டுதலை வெளிப்படுத்தி உள்ளார். ஸ்வாநிதித் திட்டத்தினால், சாலையோர வியாபாரிகளின் வாழ்க்கை எளிதாகி இருப்பதுடன், இவர்கள் கண்ணியமாக வாழவும் வாய்ப்பு கிடைத்து இருப்பதாக, அவர் தெரிவித்துள்ளார்.

---------------------------------

*சிக்கிம் (19)*

சிக்கிம் மாநிலத்தின் மங்கன் மாவட்டத்தில், இன்று அதிகாலை பனி ஏரி வெடிப்பினால் தீஸ்டா ஆற்றில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதை தொடர்ந்து, அவசரமாக மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மங்கன்,கேங்டாக், பாக்யோங் மற்றும் நாம்ச்சி மாவட்டங்களில், பல வீடுகள் மற்றும் பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டதாகவும், தொலை தொடர்பு சேவைகள் துண்டிக்கப் பட்டுள்ளதாகவும், மாநில பேரிடர் மேலாண்மைத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கேங்டாக் மாவட்டத்தில், வெள்ளத்தில் இருந்து 5 உடல்கள் மீட்கப் பட்டுள்ளதாகவும், 25 பேரை மீட்புப் படையினர் காப்பாற்றி இருப்பதாகவும், தகவல் வெளியாகி உள்ளது. பாக்யோங் மாவட்டத்தில், வெள்ளத்தினால் ஏற்பட்ட சேற்றில், சில வாகனங்கள் சிக்கிக் கொண்டதில், 23 ராணுவ ஜவான்களை காணவில்லை என்றும், வேறு ஒரு நபர் மீட்கப் பட்டுள்ளதாகவும், மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். தேசிய பேரிடர் மேலாண்மை படையினரும், உதவி-மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். சிக்கிம் முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமங் இன்று காலை, சிங்டாம் பகுதியில், திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார். இதற்கிடையே, சிக்கிம் மாநிலத்தில் அடுத்த 48 மணி நேரத்தில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, இந்திய வானிலை ஆய்வுத் துறை, ரெட் அலர்ட் வெளியிட்டுள்ளது.

---------------------------------

மேற்குவங்கம் (14)

மேற்கு வங்கத்திலும் 7 மாவட்டங்களுக்கு, வெள்ள அபாயம் குறித்து எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ள நிலையில், கலிம்பாங், டார்ஜிலிங், மற்றும், ஜல்பைகுரி மாவட்டங்களில், மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர். முதலமைச்சர் திருமதி மம்தா பேனர்ஜி உத்தரவின் பேரில், மூத்த அமைச்சர்கள் மற்றும் குடிமைப் பணி அதிகாரிகள், சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு விரைந்துள்ளனர். வெள்ளத்தினால் உயிர் சேதம் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில், நிலவரங்கள் தொடர்ந்து கண்காணிக்கப் படுவதாக, மேற்குவங்க அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கொல்கத்தாவில், நேற்று இரவு முதல் இடைவிடாது பெய்த மழையினால், சாலைகளில் மழை நீர் தேங்கி, போக்குவரத்து பாதிக்கப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேற்கு மேதினிபூர், பாங்குரா, புரூலியா உள்ளிட்ட மாவட்டங்களிலும், வெள்ளச் சூழல் ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில், தேசிய பேரிடர் மேலாண்மைப் படையினரும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

---------------------------------

அமைச்சரவை (19)

பிரதமரின் உஜ்வாலா திட்ட பயனாளிகளுக்கான 200 ரூபாய் கேஸ் சிலிண்டர் மானியத்தை 300 ரூபாயாக உயர்த்த, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களுக்கு இடையிலான, கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு பிரச்சனையை, 1956ஆம்

ஆண்டு நதி நீர் தாவா சட்டத்தின் கீழ், தீர்ப்பதற்கான 2ஆவது நடுவர் மன்றத்தால் ஆராயப்பட வேண்டிய அம்சங்களின் பட்டியலையும் மத்திய அமைச்சரவை இறுதி செய்துள்ளது. தெலங்கானா மாநிலத்தில், சம்மக்கா-சாரக்கா மத்திய பழங்குடி பல்கலைக்கழகம் அமைக்க ஏதுவாக, மத்திய பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்து இருப்பதாக, மத்திய அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் தெரிவித்தார். மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி இன்று செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், தேசிய அளவில் மஞ்சள் வாரியம் அமைக்கவும், மத்திய அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளதாக தெரிவித்தார். மஞ்சள் நுகர்வால் ஏற்படக் கூடிய பயன்கள் குறித்து, விழிப்புணர்வை அதிகரிக்கவும், உலக அளவில் மஞ்சளுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கவும், தேசிய மஞ்சள் வாரியம் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

---------------------------------

*விமானம் (19)*

ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம், பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு. அஜய்பட் முன்னிலையில், பெங்களூரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 2 இருக்கைகள் கொண்ட தேஜஸ் இலகு ரக போர் விமானங்களை, இந்திய விமானப் படையிடம் ஒப்படைத்துள்ளது. இந்த விமானம் முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது என்பதால், சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு, இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணம் என்றும், அமைச்சர் கூறினார். இந்திய விமானப் படையின்

தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் வி.கே சௌத்ரி, ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திரு. அனந்த கிருஷ்ணன் உட்பட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். திரு. சௌத்ரி பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், தேஜஸ் ரக போர் விமானங்களால், இந்திய விமானப் படையில் புதிய அத்தியாயம் தொடங்கி இருப்பதாகவும், விமானப் படையின் வல்லமை அதிகரித்து இருப்பதாகவும் கூறினார். இத்தகைய மொத்தம் 220 விமானங்களை, விமானப் படைக்கு வாங்க உத்தேசிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தேஜஸ் ரக போர் விமானங்களின் உற்பத்தி நடைமுறைகள் பற்றிய சிறப்பு ஆவணப் படம் ஒன்றும் இந்நிகழ்ச்சியின் போது திரையிடப்பட்டது.

---------------------------------

ஸ்டாலின் (12)

புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடக்குவது குறித்து, தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பை உடனடியாக நிறுத்தி வைக்கக் கோரி, தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதி உள்ளார். ஆணையத்தின் அறிவிப்பினால், எதிர்காலத்தில் புதிய மருத்துவமனைகளும், முதலீடுகளும் தமிழகத்திற்கு வரும் வாய்ப்புகள் முற்றிலுமாக பாதிக்கப்படும் என்று கடிதத்தில் அவர் கூறியுள்ளார். இதுகுறித்து மாநில அரசுகளுடன் உரிய ஆலோசனைகளை மேற்கொள்ள, மத்திய சுகாதார அமைச்சகத்தை பிரதமர் அறிவுறுத்த வேண்டும் என்றும், தமிழக முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், 10 லட்சம்

மக்கள் தொகைக்கு 100 எம்பிபிஎஸ் இடங்கள் என்ற விகிதத்தை பின்பற்ற வேண்டும் என, புதிய அறிவிப்பில், தேசிய மருத்துவ ஆணையம் கூறியுள்ளது.

---------------------------------

தேர்வு (11)

புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறையில், அறுவை சிகிச்சைக் கூட உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத் தேர்வு, வரும் 15ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை, காலை 10 மணி முதல், 12 மணி வரையிலும், காவல் துறையில், 3ஆம் நிலை ஓட்டுனர் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு, 15ஆம் தேதி பிற்பகல் 2.30 முதல், 4.30 மணி வரையிலும், பாரதிதாசன் அரசுப் பெண்கள் கலைக் கல்லூரியில் நடைபெற உள்ளது. தேர்வர்கள், தங்களுக்கான அனுமதிச் சீட்டுகளை, recruitment.py.gov.in என்னும் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இருந்து, பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அறிவித்துள்ளது. கூடுதல் விவரங்களுக்கு, 0413-22 33 33 8 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------------

வானிலை (10)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 10ஆம் தேதி வரை, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என

சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், நெல்லை, குமரி மற்றும் தென்காசி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தென்தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக் கடல், தெற்கு கேரளம், மற்றும், லட்சத் தீவு பகுதிகளில் பலத்த சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் இன்றும், நாளையும், இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

---------------------------------

*ஆசிய விளையாட்டு (14)*

சீனாவில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் 11ஆவது நாளான இன்று, இந்தியா இதுவரை, 78 பதக்கங்களை வென்றுள்ளது. 16 தங்கம், 30 வெள்ளி, மற்றும், 32 வெண்கலப் பதக்கங்கள் இதில் அடங்கும். ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில், இது இந்தியாவின் ஆகச் சிறந்த சாதனையாகும். இந்த சாதனை குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூரும்,வீரர்-வீராங்கனைகளைப் பாராட்டி உள்ளார். இன்றைய தினம், ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் கலப்பு காம்பவுண்ட் வில்வித்தை குழுப் போட்டியில், இந்தியாவின் ஓஜாஸ் தேவ்டேல்-ஜோதி வென்னம் இணை, தங்கப் பதக்கம் வென்றது. மகளிர் 75 கிலோ குத்துச் சண்டைப் பிரிவில், லவ்லினா போர்கோஹைன் வெள்ளிப் பதக்கம் வென்றார். 35

கிலோ மீட்டர் கலப்புத் தொடர் நடைப் போட்டியில், இந்தியாவின் ராஜ்பாபு-மஞ்சுராணி இணை, வெண்கலப் பதக்கம் வென்றது.

---------------------------------

*கிரிக்கெட் (8)*

உலகக் கோப்பைக்கான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள், நாளை தொடங்க உள்ளன. அகமதாபாத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் முதல் போட்டியில், இங்கிலாந்து-நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. வரும் ஞாயிற்றுக் கிழமை சென்னையில் நடைபெறும் போடடியில், இந்தியா, ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது. நாளை மறுநாள் ஹைதராபாத்தில், பாகிஸ்தான் தனது முதலாவது போட்டியில் நெதர்லாந்துடன் மோத உள்ளது. இதற்கிடையே, இந்தியா-ஆஸ்திரேலிய அணி வீரர்கள், உலகக் கோப்பைப் போட்டியில் கலந்து கொள்வதற்காக, சென்னை வந்து சேர்ந்துள்ளனர்.

---------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

- பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, மத்திய பிரதேஷ் மற்றும் ராஜஸ்தானில் மொத்தம் 17 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

- சாலையோர வியாபாரிகளுக்கான ஸ்வாநிதி திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை 50 லட்சத்தை தாண்டி, புதிய மைல்கல் எட்டப் பட்டுள்ளதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

- பிரதமரின் உஜ்வாலா திட்ட பயனாளிகளுக்கான 200 ரூபாய் கேஸ் சிலிண்டர் மானியத்தை 300 ரூபாயாக உயர்த்த, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

- புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடக்குவது குறித்து, தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பை நிறுத்தி வைக்கக் கோரி, தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின், பிரதமருக்கு கடிதம் எழுதி உள்ளார்.

----------------------